2023 மார்ச் 23] [திரு. எடப்பாடி K. பழனிசாமி]

இச்சம்பவம் தொடர்பாக, அரசு கடும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், இது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்ற தகவலை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவைக்குத் தெரிவிக்க வேண்டுமென்றும் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கெனவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்கள் கேட்டார்கள். இதை நாளைக்கு எடுத்துக்கொள்வோம் என்றேன். இதை நீங்கள் இன்றைக்குப் பதிவு செய்ய வேண்டுமென்று சொன்னதால், இது பதிவு செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் நாளைக்குப் பதில் சொல்வார்கள்.

(ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், ஓரிக்கை, குருவிமலை பகுதி, பட்டாசுத் தொழிற்சாலையில் ஏற்பட்ட வெடி விபத்தில் 10 பேர் உயிரிழந்தது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள்.

திரு. கு. செல்வபெருந்தகை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று என்னுடைய ஸ்ரீபெரும்புதூர் தொகுதியில் எழிச்சியூர் பகுதியில் மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் ஒரு நிகழ்ச்சிக்காக வருவதற்குக் காத்திருந்தோம். 12 மணி அளவில் மிக அதிர்ச்சிகரமான ஒரு செய்தி; காஞ்சிபுரம் மாவட்டம், குருவிமலை பகுதியில் பட்டாசுத் தொழிற்சாலையில் வெடி விபத்து ஏற்பட்டு 10 பேர் அகால மரணமடைந்திருக்கிறார்கள். பலர் இன்னும் உயிருக்குப் போராடிக்கொண்டிருக்கிறார்கள். இதைக் கேள்விப்பட்டு மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் 'நீங்கள் வருகிறீர்களா' என்று கேட்டபோது, 'மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்னை அங்கே விரைந்து செல்லச் சொல்லியிருக்கிறார்; நான் அங்கே செல்கிறேன்; உங்கள் நிகழ்ச்சியை இரத்து செய்யுங்கள்' என்று சொன்னார். இந்தப் பட்டாசுத் தொழிற்சாலை விபத்து எப்படி ஏற்பட்டது என்பதைப் பத்திரிகையிலும், தொலைக்காட்சியிலும் பார்த்தோம். சிவகாசி பகுதியில் பாதுகாப்பைக் கருதி பல ஏற்பாடுகளைச் சரியாகச் செய்திருக்கிறார்கள். நரேந்திரன் என்பவர் ஓர் அரசியல் பிரமுகர், அந்தத் தொழிற்சாலையை நடத்துகிறார். இப்படிப்பட்ட பகுதியில், அதுவும் குறைந்தபட்ச பாதுகாப்பு

[திரு. கு. செல்வபெருந்தகை] [2023 மார்ச் 23

இல்லாமல், இடைவெளியில்லாமல் ஒரு பட்டாசுத் தொழிற்சாலை இருக்கிறது. குறைந்தபட்சம் 2 அடி மண் கொட்டியிருக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள்; இடைவெளி இருக்க வேண்டுமென்று சொல்கிறார்கள்; சுற்றுச் சுவர் இருக்கக் கூடாது என்று சொல்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் போதுமே!*

திரு. கு. செல்வபெருந்தகை: *எந்தப் பாதுகாப்பும் இல்லாமல். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *போதும். நீங்கள் அவையின் கவனத்தை ஈர்த்துவிட்டீர்கள்.*

திரு. கு. செல்வபெருந்தகை: *இனி வரும் காலங்களில் இப்படிப்பட்ட விபத்துகளைத் தவிர்ப்பதற்கு என்ன திட்டங்கள் இருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுந்தர் அவர்கள். அதை முடித்துவிடுகிறேன். இதற்கு* related *ஆக இருக்கட்டும்.*

திரு. க. சுந்தர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைக்கு ஒரு துயரமான சம்பவம் உத்திரமேரூர் சட்டமன்றத் தொகுதி, காஞ்சிபுரம் நகராட்சிக்குட்பட்ட ஓரிக்கை, 46-வது வார்டு பகுதியில் நடந்திருக்கிறது. அந்தச் சம்பவத்தைக் கேள்விப்பட்டவுடன் நானும், நம்முடைய மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்களும், காஞ்சிபுரம் சட்டப் பேரவை உறுப்பினர் அவர்களும், அதைபோல நம்முடைய மாண்புமிகு தொழிலாளர் நலன் – திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களும் அந்த இடத்திற்குச் சென்றோம். மருத்துவமனையில் பாதிக்கப்பட்டவர்களைப் பார்த்து ஆறுதல் கூறினோம். அதற்குப் பிறகு செங்கல்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர்களைப் பார்த்து நாங்கள் ஆறுதல் சொல்லியிருக்கிறோம். இந்தத் தகவல் அறிந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனடியாக விபத்தில் பாதிக்கப்பட்டு, இறந்தவர்களின் குடும்பங்களுக்குத் தலா 3 இலட்சம் ரூபாயும் (மேசையைத் தட்டும் ஒலி) விபத்தில் காயமடைந்தவர்களுக்கு*

2023 மார்ச் 23] [*திரு. க. சுந்தர்*]

1 இலட்சம் ரூபாயும் வழங்கியிருக்கிறார்கள். உடனடியாக மின்னல் வேகத்தில் நடவடிக்கை எடுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இந்த நேரத்திலே என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களும் அந்த விபத்திலே இறந்தவர்களுக்கு 2 இலட்சம் ரூபாயும், காயமடைந்தவர்களுக்கு 50 ஆயிரம் ரூபாயும் வழங்கியிருக்கின்றார்கள். அவர்களுக்கும் இந்த நேரத்தில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தப் பட்டாசுத் தொழிற்சாலையில் கோயில் திருவிழாக்களுக்கு அதிக அளவில் வெடி சத்தம் கேட்க வேண்டும் என்ற ஒரு நோக்கத்தில்தான் பட்டாசுகளைத் தயாரித்திருக்கிறார்கள். அந்த நிறுவனம் 2024 வரை அனுமதி பெற்றுள்ளதாகச் சொல்கிறார்கள். இருந்தாலும் கூடுதலாக ஆட்கள், மரணமடைந்தவர்கள் ஏறத்தாழ 10 பேர் என்கின்ற அளவில் செய்தி இரவு வந்தது. காலையில் பத்திரிகையைப் பார்த்தால் 11 பேர் என்று இருக்கிறது. அதுமட்டுமல்லாமல் 17 பேருக்கு மேலாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றார்கள். எனவே, இதுபோன்ற நிகழ்வுகள் இனிமேல் நடைபெறாத வண்ணம் பாதுகாப்பு ஏற்பாடுகளும், அதைப்போல அதிக அளவில் வெடி சத்தத்தைச் செய்ததற்காக அவர்கள்மீது உரிய நடவடிக்கை எடுக்கின்ற வகையிலேயும் நம்முடைய அரசு செயல்படவேண்டும் என்பதைக் கேட்டு, மீண்டும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், பாரதப் பிரதமர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. மரகதம் குமரவேல் அவர்கள்.*

முற்பகல் 10–10

***திருமதி கு. மரகதம் குமரவேல்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்டம் அருகே, வலத்தோட்டம் என்ற இடத்தில் இயங்கி வந்த பட்டாசுத் தொழிற்சாலையில் 22–3–2023 அன்று நிகழ்ந்த வெடி விபத்தில் 10 நபர்கள் பலியாகியுள்ளனர். 18 நபர்கள் மிகவும் கவலைக்கிடமாக செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் இருக்கின்றார்கள். இந்தக் கொடுமையான விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு மாண்புமிகு*

முதலமைச்சர் அவர்கள் நிவாரண நிதியாக 3.00 இலட்சம் ரூபாய் அறிவித்திருக்கிறார்கள். அந்த நிதி போதுமானதாக இருக்காது. மேலும் அதிகமான நிதி அறிவிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். அது மட்டுமல்லாமல், உயிரிழந்த ஒவ்வொரு நபரின் குடும்பத்தினருக்கும் அரசு வேலைவாய்ப்பினை வழங்க வேண்டும் என்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின், எங்கள் தலைவர் அவர்களின் சார்பாக இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். மேலும், கவலைக்கிடமாக உள்ள அந்த 18 நபர்களுக்கு உயர் சிகிச்சை அளிக்கப்பட வேண்டுமென்றும் இந்த அவையில் கேட்டுக்கொள்கிறேன். இந்நிகழ்வில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கையின் விவரத்தினையும் இந்த மன்றத்தில் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக இந்த வகையில் கவனத்தினை ஈர்த்து அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்டத்தில், காஞ்சிபுரம் நகரை ஒட்டியிருக்கின்ற குருவிமலை பகுதியின் அடிவாரத்தில், வலத்தோட்டம் பகுதியில் ஒரு பட்டாசுத் தொழிற்சாலையில் வெடிவிபத்து நிகழ்ந்துள்ளது. அந்த வெடி விபத்தில் 10 நபர்கள் இறப்பு, 18 நபர்கள் மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் இருப்பதாகப் பத்திரிகையில் செய்தி வெளிவந்துள்ளது. அந்தச் செய்தி அறிந்தவுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனடியாக சம்பந்தப்பட்ட மாவட்ட அமைச்சர் அவர்களுக்குத் தகவல் அளித்து, மாண்புமிகு அமைச்சர் அவர்களும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களும் அந்த இடத்திற்கு விரைந்து சென்று உடனடியாக நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். இவ்வாறு விரைந்து சென்று நடவடிக்கைகள் எடுத்திருப்பது வரவேற்கத்தக்கது, நாங்கள் அதை நெஞ்சார வரவேற்கிறோம்.

அதே நேரத்தில், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களும் இரங்கல் தெரிவித்து, நிதியுதவி வழங்கியிருக்கிறார்கள்; அதுவும் வரவேற்புக்குரியது. எப்படி இருந்தாலும்கூட, பட்டாசுத் தொழிற்சாலைகளில் வெடி விபத்து என்பது தொடர்ந்து நடந்துகொண்டுதான் இருக்கின்றது. 4 நாட்களுக்கு முன்னர் எங்கள் பெண்ணாகரம் தொகுதியில் நாகதாசம்பட்டி கிராமத்தில்,

2023 மார்ச் 23] [திரு. ஜி.கே. மணி]

இதே போன்ற வெடி விபத்தில் 3 நபர்கள் உயிரிழந்த சம்பவம் வருத்தத்தினை அளித்தது. அந்த நிகழ்விற்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனடியாக நிதி வழங்கினார்கள். அப்படி நிவாரணம் வழங்கியிருந்தாலும்கூட, அத்தகைய வெடி விபத்துகள் இவ்வாறு அடிக்கடி நிகழக் கூடாது. துறை அதிகாரிகள் பட்டாசுத் தொழிற்சாலைகளுக்கு அனுமதி வழங்கியிருக்கிறார்கள்; அனுமதி வழங்கியும்கூட, எவ்வாறு அங்கு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதைத் துறை வல்லுநர்கள் சரியான முறையில் ஆய்வு செய்ய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும். Zero hour-ல் இது போதும்.

திரு. ஜி.கே. மணி: இதற்குமேலும் இது போன்ற நிகழ்வுகள் நடக்காத வகையில் பார்த்துக்கொள்வதற்கு அரசு முன்வர வேண்டும் என்று அரசின் கவனத்தினை ஈர்த்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S.S. பாலாஜி அவர்கள்.

***திரு. S.S. பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வெடி விபத்தில் மறைந்தவர்களுக்கு விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் எனது அஞ்சலியைச் செலுத்திக்கொள்கிறேன். அந்த விபத்து நிகழ்ந்த உடனேயே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சம்பந்தப்பட்ட மாவட்ட அமைச்சர், மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்களை அவ்விடத்திற்கு அனுப்பி, மக்களுக்கான உரிய இழப்பீட்டையும் உடன் அறிவித்திருப்பது, ஆறுதல் அளிக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கவனத்தை ஈர்த்து அமர்கிறேன் என்று சொல்லுங்கள். Zero hour-ல் பேச முடியாது.

திரு. S.S. பாலாஜி: ஒரே நிமிடம். பட்டாசுத் தொழிற்சாலைகளில் 2011 முதல் 2020 வரை 142 வெடி விபத்துகள் ஏற்பட்டிருக்கின்றன. கிட்டத்தட்ட 240 நபர்கள் உயிரிழந்திருக்கின்றனர். இதில் முக்கியமானது, அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக சொல்லப்படுகிறது. ஆனால் மாசு கட்டுப்பாட்டு வாரியத்தினுடைய இணையத்தில் பார்க்கின்றபோது, தமிழ்நாட்டில் மொத்தம் 83 தொழிற்சாலைகளுக்கு மட்டும் அனுமதி வழங்கப்பட்டுள்ளன.

அவற்றில், கிட்டத்தட்ட 70 தொழிற்சாலைகளுக்கும் மேலாக விருதுநகர் மாவட்டத்திலும், ஒன்று திருநெல்வேலி மாவட்டத்திலும், 3 தூத்துக்குடி மாவட்டத்திலும் உள்ளன. மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் கட்டுப்பாட்டில் பல பட்டாசுத் தொழிற்சாலைகள் வருவதில்லை என்பதை கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். அதேபோன்று இதுபோன்ற அபாயகரமான பட்டாசுகள் தயாரிப்பதைத் தடை செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். உரிமம் வழங்கப்படும்போது. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும். மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலாஜி, நீங்கள் பேசியதை பதிவு செய்தாகிவிட்டது.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்டத்தில் நடைபெற்ற பட்டாசுத் தொழிற்சாலை விபத்தின் காரணமாக 10 உயிர்கள் பலியாகியுள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உரிய நிவாரணம் வழங்கியிருக்கிறார்கள். சம்பந்தப்பட்ட மாண்புமிகு மாவட்ட அமைச்சர் அவர்களும் சென்று ஆறுதல் கூறியிருக்கிறார்கள். இதுபோன்ற நிகழ்வுகள் தொடர்ச்சியாக நடைபெறுவதை தடுப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். வெளிநாடுகளிலுள்ள தொழிற்சாலைகளில் இதுபோன்ற நிகழ்வுகளைத் தடுப்பதற்கான சாதனங்கள் பொருத்தப்பட்டுதான் பட்டாசுத் தொழிற்சாலைகளில் பணிபுரிவதற்கு அனுமதிக்கின்றார்கள். ஆதலால் இதுபோன்ற வெடி விபத்துகள் ஏற்பட்டாலும், உயிர்ச் சேதம் ஏற்படாதவண்ணம் பாதுகாப்பு சாதனங்களையும், பாதுகாப்பு ஏற்பாடுகளையும் மேற்கொண்டு உயிர்களைக் காப்பாற்றும்வண்ணம் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். நேற்றையதினம் இதுபோன்ற விபத்து சேலத்தில் நடந்து, விபத்தில் ஒருவர் உயிரிழந்திருக்கிறார், அதேபோன்று கடலூர் மாவட்டத்திலும் சில மாதங்களுக்கு முன்பாக நடைபெற்ற விபத்தில் உயிரிழப்புகள் நிகழ்ந்தன. சிவகாசியிலும் தொடர்ந்து விபத்து நடைபெற்று வருகிறது. இனிவரும் காலங்களில் இதுபோன்று நடைபெறாதவண்ணம் உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. K. மாரிமுத்து அவர்கள்.

2023 மார்ச் 23]

முற்பகல் 10–15

திரு. K. மாரிமுத்து: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்டத்தில் நடைபெற்றிருக்கின்ற இந்த வெடி விபத்து என்பது மிகக் கொடூரமானது. நம்முடைய தமிழ்நாடு அரசாங்கம் உடனடியாகச் செயல்பட்டு, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் எல்லாம் அங்கு சென்று பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் அளித்திருக்கிறார்கள். இதுபோன்ற வெடி விபத்துகளும், அகால மரணங்களும் தமிழ்நாட்டில் உள்ள பொதுமக்கள் மத்தியிலும், தொழிலாளர்கள் மத்தியிலும் பெரும் அச்சத்தையும், பதட்டத்தையும் ஏற்படுத்துகின்றன. எனவே, இதுபோன்ற நிகழ்வுகள் இனி நடைபெறாமல் இருப்பதற்குத் தமிழ்நாடு அரசாங்கம் உரிய சட்டத் திருத்தங்களைக் கொண்டு வர வேண்டும். பாதுகாப்பான தொழில்கள், தொழிற்சாலைகள் உருவாக்கப்பட வேண்டுமென்று அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள்.*

திரு. வி.பி. நாகைமாலி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் நகரத்தின் அருகில் உள்ள குருவிமலை, வசந்த் நகர் பகுதியில்* Narendran Fireworks *என்கிற பட்டாசு ஆலை இயங்கி வருகிறது. நேற்று இந்த பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடி விபத்தில் இதுவரை 10 பேர் மரணம் அடைந்துள்ளனர். 15 பேர் காயம் அடைந்துள்ளனர். இந்த வெடி விபத்து நிகழ்ந்தபோது, அந்த ஆலையைச் சுற்றியுள்ள 50 கிலோ மீட்டர் சுற்றளவிற்கு அதிர்வு ஏற்பட்டுள்ளது. பட்டாசு ஆலை செயல்பட்டு வந்த கட்டடங்கள் முழுவதும் இடிந்து தரை மட்டமாகியுள்ளன. இங்கு வேலை செய்து வந்தவர்கள் அனைவரும் சாதாரண கூலித் தொழிலாளர்கள் மற்றும் நெசவாளர்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.*

இந்தப் பட்டாசு ஆலையில் எந்தவிதமான பாதுகாப்பு விதிமுறைகளும் முறையாகக் கடைபிடிக்கப்படவில்லை என்பது தெரிய வருகிறது. ஊழியர்களுக்கும் எந்தவிதமான விபத்து காப்பீடுகளும் செய்யப்பட்டதாகவும் தெரியவில்லை. எனவே, தமிழகத்தில் இதுபோன்ற தொடர் வெடி விபத்துகளும், அதையொட்டிய உயிர் பலிகளும் நடைபெற்று வரக்கூடிய சூழலில், அரசு அனுமதி பெறாமல், பாதுகாப்பு விதிகளைக் கடைபிடிக்காமல்

நடைபெற்று வரும் அனைத்து பட்டாசு ஆலைகளும், பாதுகாப்பு விதிமுறைகளைக் கடைபிடிப்பதையும், பட்டாசு ஆலைகள் உரிய பாதுகாப்பு அம்சங்களுடன் செயல்படுகிறதா என்பதைத் தொழிற்சாலை ஆய்வாளர்கள் தொடர்ந்து கண்காணிப்பதையும் அரசு உறுதி செய்திட வேண்டுமென்று இந்த அவையின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் வட்டம், ஓரிக்கை கிராமத்தில், குருவிமலை பகுதியில் Narendran Fireworks என்ற பட்டாசு ஆலையில் நேற்றையதினம் மிகப் பெரிய வெடி விபத்து ஏற்பட்டிருக்கிறது.

இந்தப் பட்டாசு ஆலை 1991 முதல் இயங்கி வருகிறது. DRO அவர்களால் கொடுக்கக்கூடிய L.E. உரிமம் என்ற உரிமத்தில் இந்தப் பட்டாசு ஆலை இயங்கி வருகின்றது. ஒரு நேரத்தில் 15 கிலோ என்ற அளவில்தான் வெடி பொருட்கள் வைத்து வேலை செய்ய வேண்டுமென்று அந்தச் சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால், நேற்றையதினம் நடந்த இந்த நிகழ்ச்சியிலே, அந்தப் பகுதிகளில், அதிகளவில் திருவிழாக்கள் நடைபெற இருக்கின்ற காரணத்தினால், அதிகப்படியான பட்டாசுகள் தயாரிக்கப்பட வேண்டுமென்று சொல்லி, அந்தப் பட்டாசு ஆலையின் அதிபர் அதிக எண்ணிக்கையில் ஆட்களை அமர்த்தி, அதிகளவில் அந்த வெடிப் பொருட்களை வைத்து பட்டாசுகளைத் தயாரித்த காரணத்தினால்தான் நேற்றையதினம் அந்த வெடி விபத்து ஏற்பட்டு, சம்பவ இடத்திலேயே 5 பேர் இறந்திருக்கிறார்கள், மருத்துவமனையில் 5 பேர், மொத்தம் 10 பேர் இறந்திருக்கிறார்கள். இந்தத் தகவல் கிடைத்தவுடனேயே சம்பந்தப்பட்ட மாவட்டத்தினுடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களையும், தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களையும், அந்தப் பகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்களையும் உடனடியாக அங்கு சென்று பார்வையிட்டு, அவர்களுக்கு வேண்டிய ஆறுதல்களை அளிக்க வேண்டுமென்று சொல்லியதோடு மட்டுமல்லாமல், பாதிக்கப்பட்டவர்களுக்கும், காயமடைந்தவர்களுக்கும் சரியான மருத்துவ வசதியை செய்துதர வேண்டுமெனத் தெரிவித்து, Medical College Hospital-ல் அவர்களைச் சேர்த்து, அவர்களுக்கு

2023 மார்ச் 23] [திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்]

வேண்டிய மருத்துவ வசதிகளைச் செய்து கொடுத்து, சரியான முறையில் கவனிக்க வேண்டுமெனத் தெரிவித்து, நேற்றையதினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்.

பொதுவாக, தொழிலாளர்களுடைய தவறின் காரணமாகவும், இந்தச் சிறிய பட்டாசு ஆலை முதலாளிகளுடைய ஆசையின் காரணமாகவும்தான் இதுபோன்ற பட்டாசு விபத்துகள் நடக்கின்றன.

எங்கள் விருதுநகர் மாவட்டத்தில் 1,076 பட்டாசு ஆலைகள் இருக்கின்றன. வெடி விபத்து ஏற்படுகின்ற ஆலைகள் என்று பார்த்தோம் என்றால், இந்தச் சிறிய பட்டாசு ஆலைகள் அல்லது lease-க்கு விடப்படும் பட்டாசு ஆலைகள்; அவர்கள் இலாப நோக்கத்தை மட்டுமே கவனத்தில் வைத்துச் செயல்படுகிற காரணத்தினால்தான் இதுபோன்ற வெடி விபத்துகள் ஏற்படுகின்றன என்பதையெல்லாம் நாங்கள் கவனத்தில் வைத்து, அதற்காக மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களும், நானும் சேர்ந்து, பட்டாசு ஆலை அதிபர்களையெல்லாம் அழைத்து, வெடி விபத்துகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. நாங்கள் தொழிலைக் கெடுக்க வேண்டுமென்று நினைக்கவில்லை; ஆனால், மக்களுக்கு உயிர் சேதம் ஏற்படுவதைத் தடுப்பது என்பது அரசாங்கத்தினுடைய கடமையாகும். அதற்கு என்ன செய்ய வேண்டுமெனக் கேட்டு ஒரு நாள் கருத்தரங்கை நடத்தி அந்த ஆலையில் பணிபுரியும் foreman-களுக்கு என்ன dress கொடுத்தால் அது fire ஆகாமல் இருக்கும் என்று அந்தக் கருத்தரங்கில் விவாதித்து, அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எங்களுடைய விருதுநகர் மாவட்டத்தில் நாங்கள் எடுத்துள்ளோம்.

முற்பகல் 10–20

இப்படி, காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஒன்று, வேலூர் மாவட்டத்தில் ஒன்று மற்றும் காட்பாடியில் ஒன்று என ஒருசில பட்டாசு ஆலைகளில் விபத்துகள் நடந்திருக்கின்றன. இப்படிப்பட்ட விபத்துகள் ஏற்படுகின்ற நேரத்தில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோன்று, அந்தப் பகுதிகளில் இருப்பவர்களுக்கு Training குறைவாக இருக்கிறது. அதனால்தான் பட்டாசு ஆலைகளில் வெடி விபத்துகள் ஏற்பட்டிருக்கின்றன. அதையும் மாவட்ட ஆட்சித் தலைவர்களிடத்தில் எடுத்துச்

[திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்] [*2023 மார்ச் 23*

சொல்லி, அவர்களுக்கும் உரிய பயிற்சி அளிக்க வேண்டுமென்று நாங்கள் வலியுறுத்திச் சொல்லியிருக்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேற்றையதினம் உடனடியாக வெடி விபத்தில் இறந்தவர்களுடைய குடும்பத்திற்கு தலா ரூ.3 இலட்சம் அறிவித்திருக்கிறார்கள். காயமடைந்தவர்களுக்கு ரூ.1 இலட்சம் வழங்க வேண்டுமென்று அறிவுறுத்தியிருக்கிறார்கள்.

எங்கள் பகுதியில் பார்த்தோமென்று சொன்னால், வெடி விபத்தில் இறந்தவர்களுடைய குடும்பத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அரசாங்கத்தின்மூலம் ரூ.3 இலட்சமும், காயமடைந்தவர்களுக்கு ரூ.1 இலட்சமும், பட்டாசு ஆலை உரிமையாளர்கள், இறந்தவர்களுடைய குடும்பத்திற்கு ரூ.5 இலட்சமும், காயமடைந்தவர்களுக்கு ரூ.50,000/-மும் வழங்கும் நடைமுறையை எங்கள் மாவட்டத்தில் வழக்கத்தில் கொண்டு வந்திருக்கிறோம். ஆகவே, பட்டாசு ஆலை உரிமையாளர்களுக்கு பயம் இருக்கும். 5 பேர் இறந்துபோனால் ரூ.25 இலட்சம் அவர்கள் கையிலிருந்து கொடுக்க வேண்டும். இறந்தவர்களின் உடலை அடக்கம் செய்வதற்குக் கொண்டு செல்லும் முன்னரே இந்தத் தொகையை பணமாகவோ, காசோலையாகவோ, பெரிய தொழிற்சாலை அதிபராக இருந்தால் காசோலையாகவும், மற்றவர்களிடம் ரொக்கமாகவும் பெற்றுக் கொடுக்கிறோம். அவ்வாறு ஏன் பெற்றுக் கொடுக்கிறோம் என்று சொன்னால், அது பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணமாகவும் இருக்கிறது; இறப்பு ஏற்படுகின்ற நேரத்தில் மிகப் பெரிய பொருட்செலவு ஏற்படும் என்ற ஓர் அச்ச உணர்வு பட்டாசு ஆலை அதிபர்களுக்கு வரும் என்ற நோக்கத்தில் அதை நாங்கள் கண்காணிக்கிறோம். (குறுக்கீடு) அதேபோன்று, பட்டாசு ஆலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு சிறப்பு முகாம் நடத்தி தொழிலாளர்கள் காப்பீடும் ஏற்படுத்தித் தருகிறோம். என்ன செய்தாலும்கூட, பட்டாசு ஆலைகளில் ஏற்படும் வெடி விபத்துகளினால் இறப்பவர்களைவிட காயமடைந்தவர்களைப் பார்க்கும்போது நமக்கு மிகவும் பரிதாபமாக இருக்கும். அவர்களது உடலில் தோலெல்லாம் உரிந்துபோய், அகோரமாக இருக்கக்கூடிய சூழ்நிலை இருக்கும். அவர்களுடைய சொந்தங்களே தொட்டுப் பார்க்க அச்சப்படக்கூடிய அளவிற்கு அவர்களுடைய நிலை இருக்கும். அவர்களையெல்லாம் நாங்கள் நேரடியாகப் பார்த்திருக்கிறோம். எனவே, காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் மட்டுமல்லாமல், அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் இதுகுறித்து அறிவுறுத்தியிருக்கிறோம்.

2023 மார்ச் 23] [திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்]

இன்று காலை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க, CRA *மூலமாக ஒரு* circular *அனுப்பச் சொல்லி அறிவுறுத்தியிருக்கிறோம். ஒரு மாவட்டத்தில் 3, 4* factories *இருந்தால்கூட அவர்களையும் அழைத்துப் பேசி, அவர்களுக்கு உரிய பயிற்சி அளித்து, அவர்களையெல்லாம் ஒழுங்குபடுத்த வேண்டுமென்று நாங்கள் எச்சரிக்கை செய்துகொண்டிருக்கிறோம். தொடர்ந்து இதுபோன்ற விபத்துகள் ஏற்படாமல் இருக்க வேண்டிய நடவடிக்கைகளை நிச்சயமாக அரசாங்கம் எடுக்கும். பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்க வேண்டிய நிவாரணத் தொகையையும் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மனிதாபிமான அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிச்சயமாகச் செய்வார்கள் என்பதையும் கூறி, இனிமேல் இதுபோன்ற விபத்துகள் நடைபெறாதவண்ணம் அவர்களுக்கு முறையாக* training *அளிக்கவும்,* foreman*-க்கு உரிய உடை ஆகியவற்றை விருதுநகர் மாவட்டத்தில் வழங்குவது போன்றே இவர்களுக்கும் வழங்குவோம் என்று சொல்லி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.*

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், கிட்டம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. ஜெகன் உயிரிழந்தது—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எழுப்பிய கேள்விக்கு (குறுக்கீடு) நான் வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நாளை பதில் சொல்வதாக இருந்தார்கள். ஆனால், இன்றே அதற்கான பதிலைச் சொல்ல விரும்புகிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்வு குறித்து இங்கே கவன ஈர்ப்பினை எழுப்பியிருக்கிறார்கள். அதற்குரிய விளக்கத்தைத் தங்களின் அனுமதியோடு இந்தப் பேரவைக்கு அளித்திட விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் காவல் நிலைய சரகம், கிட்டம்பட்டியைச் சேர்ந்த ஜெகன் (வயது 28) என்பவர், மார்ச் 21 அன்று சுமார் 1.30 மணியளவில் தனது இருசக்கர வாகனத்தில் கே.ஆர்.பி. அணை சாலையில் சென்று கொண்டிருந்தபோது,